# கட்டி (புற்று) நோய்களைப் பதிவு செய்வது பற்றிய தகவல்கள்

நோயாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் அதிகாரபூர்வ தகவல்கள் தொடர்பான துண்டுப் பிரசுரம்.

விரிவான தகவல்களை எமது இணையத் தளத்தில் www.nkrs.ch, ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலிய மற்றும் ஆங்கில மொழிகளில் மேலதிக விரிவான நோயாளிகளுக்கான தகவல்களில் நீங்கள் காணலாம்.

Nationale Krebsregistrierungsstelle
Organe national d'enregistrement du cancer
Servizio nazionale di registrazione dei tumori
National Agency for Cancer Registration

Kinderkrebsregister
Registre du cancer de l'enfant
Registro dei tumori pediatrici
Childhood Cancer Registry

# சிறப்பானதொரு சுகாதார சேவைக்கு உங்கள் பங்களிப்பு

தீங்கற்ற கட்டிகள், புற்று நோயின் ஆரம்ப படிநிலைகள் மற்றும் புற்று நோய்களின் சட்ட ரீதியான பதிவு பற்றி இச் சிறு பிரசுரம் உங்களுக்கு தகவல்களை வழங்குகின்றது. இது பரந்து பட்ட அளவிலான சம்பவங்களை உள்ளடக்குகின்றது. இச் சிறு பிரசுரத்தை நீங்கள் கிடைக்கப் பெற்றதும், உங்களுக்கு வீரியம் மிக்க (புற்று நோய்க்) கட்டி இருப்பதாக இயல்பாகவே பொருளாகாது!

புற்றுநோய் பதிவானது புற்று நோயைப் பதிவு செய்வதற்கான கூட்டாட்சி சட்டத்திற்கமைவாக மேற்கொள்ளப்படுகின்றது (புற்றுநோய் பதிவுச் சட்டம், KRG). இச் சட்டத்தின் பிரகாரம் மருத்துவர்கள், மருத்துவமனைகள் மற்றும் ஆய்வு கூடங்கள் கட்டி (புற்று) நோய்கள் குறித்த தகவல்களைப் பொறுப்பான புற்றுநோய் பதிவேட்டுக்கு அனுப்ப வேண்டும். புற்றுநோய் பதிவு எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றியும், உங்கள் சொந்தத் தரவுகளைப் பார்வையிடுவதற்கும், பதிவு செய்வதை ஆட்சேபிப்பதற்குமான உங்கள் உரிமையைப் பற்றியும் இங்கு நாம் உங்களுக்கு தகவல் தருகின்றோம்.

மாநில புற்றுநோய் பதிவேடுகள் மற்றும் சிறுவர் புற்றுநோய் பதிவேட்டு நிலையங்கள் மூலம் கட்டி (புற்று) நோய்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகின்றன. மேற்படி தரவுகள் பின்னர் தேசிய புற்றுநோய் பதிவேட்டு நிலையம் மற்றும் சிறுவர் புற்றுநோய் பதிவேட்டு நிலையங்களினால் தொகுக்கப்பட்டு தொடர்ந்து செயலாக்கப்படுகிறது.

# உங்கள் தரவுகள் ஏன் பதிவு செய்யப்படுகின்றன?

உங்கள் தரவுகள் மூலம் நோய்வாய்ப்பட்ட அனைத்து நிகழ்வுகளையும் சாத்தியமானவரை முழுமையாக பதிவு செய்வதற்கு நீங்கள் முக்கிய பங்களிப்பை நல்குகின்றீர்கள். சகலருக்குமான பராமரிப்பை மேம்படுத்தவும், நோய்களைப் புரிந்து கொள்ளவும், அவற்றை எதிர்த்துப் போராடவும் இவை உதவுகின்றன.

# 1. தகவல் பற்றி உங்களுக்குள்ள உரிமை: எவை பதிவு செய்யப்படுகின்றன?

மாநில புற்றுநோய் பதிவேடுகள் மற்றும் சிறுவர் புற்றுநோய் பதிவேட்டு நிலையங்கள் தனிநபர் மற்றும் நோய் பற்றிய தகவல்களை சேகரிக்கின்றன. பின்வரும் வகையான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன:

- தனிநபர் பற்றிய தகவல்கள் (உதாரணம்: பெயர், முகவரி, பிறந்த திகதி, AHV-எண்)
- கட்டி (புற்று) நோய் பற்றிய தகவல்கள் (உதாரணம்: கட்டி (புற்று) யின் வகை மற்றும் அதன் பரவல், இதுவரையான சிகிச்சை, நோயின் போக்கு)

மார்பகம், பெருங்குடல் அல்லது புரோஸ்டாட்டா (புற்றுநோய்) கட்டிகள் மற்றும் 20 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் இளவயதினர் தொடர்பாக மேலும் பல தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

இத் தரவுகள் வெளிப்புறப் பட்டியல்களுடன் (மருத்துவமனை பட்டியல்கள், குடியிருப்பாளர்களின் பட்டியல்கள், போன்றன) ஒப்பிடுவதன் மூலம் புதியன சேர்க்கப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

**குறிப்பு:**
சம்பந்தப்பட்ட புற்றுநோய் பதிவேடு தேசிய புற்றுநோய் பதிவு அலுவலகத்திற்கு தரவுகளை அனுப்புவதற்கு முன், உங்களது அநேக தனிப்பட்ட தகவல்கள் (பெயர், முகவரி, சரியான பிறந்த திகதி, AHV-எண் ) அகற்றப்படுகின்றன.

## 2. தரவுகளை பார்ப்பதற்கான உங்கள் உரிமை: உங்கள் சொந்தத் தரவுகளை நீங்கள் இவ்வாறு அணுகலாம்

உங்கள் சொந்தத் தரவுகளை நீங்கள் புற்றுநோய் பதிவேட்டில் எந்த நேரத்திலும் பார்க்கலாம்.

உங்கள் தரவுகளை பார்க்க விரும்பினால், உங்கள் மாநிலத்தில் உள்ள புற்றுநோய் பதிவேட்டு நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும். குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கான தரவுகளைப் பார்ப்பதற்கு, சிறுவர் புற்றுநோய் பதிவேட்டு நிலையத்துடன் (www.kinderkrebsregister.ch) தொடர்பு கொள்ளவும்.

## 3. ஆட்சேபனை மனு செய்வதற்கான உங்கள் உரிமை

உங்கள் தரவுகள் பதிவு செய்யப்படுவதை நீங்கள் விரும்பவில்லையெனில், நீங்கள் எந் நேரத்திலும் எழுத்துருவில் ஆட்சேபனை மனு செய்யலாம். ஒரு ஆட்சேபனை மனு வாழ்நாள் பூராகவும் என்பதுடன் சுவிட்சர்லாந்து முழுவதும் இது செல்லுபடியாகும். எந்த நேரத்திலும் நீங்கள் ஆட்சேபனை மனுவைத் திரும்பப் பெற முடியும்.

புற்றுநோய் பதிவேட்டிலிருந்து அறிவிப்பு கிடைத்த மூன்று மாதங்களுக்குள் ஆட்சேபனை மனு மேற்கொள்ளப்படும் பட்ச்சத்தில், தரவுகள் பதிவு செய்யப்படமாட்டாது என்பதுடன் அவை அழிக்கப்படும். புற்றுநோய் பதிவேட்டிலிருந்து அறிவிப்பு கிடைத்த மூன்று மாதங்களுக்குப் பின் ஆட்சேபனை மனு மேற்கொள்ளப்பட்டால், தனிப்பட்ட தகவல்கள் உடனடியாக நீக்கப்படும். நோய் பற்றிய தகவல்கள் பதிவேட்டில் இருக்கும்.

யாரோ ஒருவர் ஆட்சேபனை மனுவை செய்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளதெனில், இவ் ஆட்சேபனை மனு மேற்கொள்ளப்பட்ட கணப்பொழுதிலிருந்து மேலதிக தரவுகள் எதுவும் பதிவு செய்யப்பட மாட்டாது.

## ஆட்சேபனை மனுவை இவ்வாறு நீங்கள் செய்யலாம்:

1. மாநில புற்றுநோய் பதிவேட்டு நிலையம், சிறுவர் புற்றுநோய் பதிவேட்டு நிலையம் அல்லது தேசிய புற்றுநோய் பதிவு அலுவலகம் ஆகியவற்றிலிருந்து ஆட்சேபனைப் படிவத்திற்கு விண்ணப்பிக்கவும் அல்லது பதிவிறக்கம் செய்யவும்: www.nkrs.ch/downloads.
2. இப் படிவத்தை பூர்த்தி செய்து அதில் கையொப்பமிடுங்கள்.
3. இப் படிவத்தை மாநில புற்றுநோய் பதிவேட்டு நிலையத்துக்கு அல்லது சிறுவர் புற்று நோய் பதிவேட்டு நிலையத்துக்கு அனுப்புங்கள்.

உங்கள் ஆட்சேபனை மனுவை நீங்கள் நியாயப்படுத்த வேண்டியதில்லை. நீங்கள் புற்றுநோய் பதிவேட்டு நிலையத்திலிருந்து எழுத்துருவிலான உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்வீர்கள்.

மாநில புற்றுநோய் பதிவேட்டு நிலையம் மற்றும் சிறுவர் புற்றுநோய் பதிவேட்டு நிலையம் ஆகியவற்றின் முகவரிகளை கீழ்வரும் எமது இணையத்தளம்: www.nkrs.ch/krebsregister மற்றும் Widerspruchsformular இலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

**குறிப்பு:**
உங்கள் குடும்பப் பெயர் மற்றும் முதல் பெயர், முகவரி, பிறந்த தேதி, காப்பீட்டு எண், திகதி மற்றும் உங்கள் கையொப்பம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு ஆட்சேபனை மனுவுக்கு நீங்கள் ஒரு கடிதம் கூட எழுதலாம்.

# இவ்வாறு தரவுகள் பாதுகாக்கப்படுகின்றன

தரவுகள் பாதுகாப்பு மற்றும் தரவுகள் பயன்பாடு சட்டரீதியாக கட்டுப்படுத்தப்படுகிறன. புற்றுநோய் பதிவுச் சட்டம் மற்றும் சுவிட்சர்லாந்தில் செல்லுபடியாகும் பிற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டதே புற்றுநோய் பதிவுகள் ஆகும். புள்ளிவிபர செயலாக்கம் மற்றும் பயன்பாடு என்பன ஆராய்ச்சி நோக்கங்களுக்கான தெளிவான விதிமுறைகளுக்குட்பட்டது.

## உங்கள் தரவுகள் இவ்வாறு பாதுகாக்கப்படுகிறன:

- தரவுகள் சுவிட்சர்லாந்தில் தனித்தனியாகவும் பாதுகாப்பாகவும் மின்னணு அமைப்புகளில் சேமித்து வைக்கப்படுகிறன.
- தரவுகளுடன் பணியாற்றும் அனைத்து நபர்களும் இரகசியக்காப்பை பேணுவதற்கு சட்டரீதியாக கடமைப்பட்டுள்ளனர்.
- தரவுகளை வைத்திருக்கும் அனைவரும் விசேட தரவுகள் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளைப் பின்பற்ற கடமைப்பட்டுள்ளனர்.
- ஏனைய நபர்கள் மற்றும் நிறுவனங்கள் போன்றன இத் தகவல்களை அணுக முடியாது - உதாரணமாக வேலை வழங்குநர் அல்லது மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள்.
- தனிப்பட்ட நபர்களைப் பற்றி எந்த தகவல்களும் எடுக்க முடியாத வகையில் பொதுமக்களுக்கான தகவல்கள் எப்போதும் செயலாக்கப்படுகிறது.
- அனுமதி சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே ஆராச்சியாளர்கள் தரவுகளை பெறுகின்றனர். அனுமதி சமர்பிக்கப்படாத பட்சத்தில், அநாமதேயமாக மட்டுமே அவர்கள் தரவுகளைப் பெறுகின்றனர்.

மேலும், புற்றுநோய் பதிவேட்டில் அவசியமற்ற தகவல்கள் உடனடியாக அழிக்கப்பட வேண்டும். அதாவது திட்டவட்டமான பயன்பாட்டினைக் கொண்ட தரவுகள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன.

# நீங்கள் துல்லியமான தகவல்களை அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?

தேசிய புற்றுநோய் பதிவு நிலையம் என்பது புற்றுநோய் பதிவு தொடர்பான அனைத்து கேள்விகளுக்கும் உங்கள் உரிமைகளைப் பயன்படுத்தி ஒத்துழைப்பு நல்கும் உங்கள் தொடர்பு மையமாகும். சிறுவர்கள் மற்றும் இளவயதினரின் புற்றுநோய் பதிவு தொடர்பான அனைத்து கேள்விகளுக்கும் குழந்தைப் பருவ புற்றுநோய் பதிவேடு உங்கள் தொடர்பு மையமாகும். மாநில புற்றுநோய் பதிவேடு மற்றும் குழந்தைகள் புற்றுநோய் பதிவேட்டின் முகவரிகளை www.nkrs.ch/krebsregister என்ற இணையதளத்தில் நீங்கள் காணலாம்.

## தேசிய புற்றுநோய் பதிவு நிலையம்

இணையத்தளம்: www.nkrs.ch
மின்னஞ்சல்: info@nkrs.ch
தொலைபேசி: +41 44 634 53 74

## சிறுவர் புற்றுநோய் பதிவேடு

இணையத்தளம்: www.kinderkrebsregister.ch
மின்னஞ்சல்: kinderkrebsregister@ispm.unibe.ch
தொலைபேசி: +41 31 631 48 61

# பதிப்பகம்

**பதிப்பாசிரியர்**
தேசிய புற்று நோய் பதிவு நிலையம் மே/பா. புற்றுநோய் பெருந்தொற்று மற்றும் புற்று நோய் பதிவுக்கான தேசிய அறக்கட்டளை கல்வி நிறுவனம் [Nationale Krebsregistrierungsstelle (NKRS) c/o Stiftung Nationales Institut für Krebsepidemiologie und -registrierung (NICER)]
மே/பா. புற்றுநோய் பெருந்தொற்று மற்றும் புற்று நோய் பதிவுக்கான தேசிய அறக்கட்டளை கல்வி நிறுவனம்
Hirschengraben 82, 8001 சூரிச், சுவிற்சர்லாந்து

சிறுவர் புற்று நோய் பதிவேட்டு நிலையம் (Kinderkrebsregister)
Mittelstrasse 43, 3012 பேர்ன், சுவிற்சர்லாந்து

**வெளியீட்டு காலப்பகுதி**
யூன் 2022

**தள அமைப்பு**
moxi ltd., Biel

**மொழிப் பதிப்புகள்**
இந்த வெளியீடு ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலிய மொழி, ரோமன்ஷ், ஆங்கிலம், அல்பேனிய மொழி, அரபு, போலந்து மொழி, போர்த்துகேய மொழி, ரஷிய மொழி, செர்பிய மொழி, குரோஷிய மொழி, ஸ்பானிய மொழி, தமிழ், துருக்கிய மொழி, இலகு ஜெர்மன், இலகு பிரஞ்சு மற்றும் இலகு இத்தாலிய மொழிகளில் கிடைக்கின்றது.

இப் பிரசுரத்தின் விளக்காமானதொரு பதிப்பு ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலிய மொழி மற்றும் ஆங்கிலத்தில் உள்ளது.

வாங்குவதற்கான கோரிக்கை (ஓர்டர்) மற்றும் பதிவிறக்கம்: பின்வரும் இணைப்பு → www.nkrs.ch/bestellung வழியாக migesplus.ch ஓர்டர் செய்யும் தளத்தில் வெளியீடுகளை நீங்கள் அணுகலாம்.

**நோயாளியின் தகவல்களைத் தயாரித்து செயல்படுத்துவதில் எமக்கு ஆதரவளித்து உதவிய பின்வரும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு எமது இதயபூர்வமான நன்றி:**
தேசிய புற்றுநோய் பதிவு நிலையம் (Nationale Krebsregistrierungsstelle), சிறுவர் புற்று நோய் பதிவேட்டு நிலையம், (Kinderkrebsregister), மாநில புற்றுநோய் பதிவேட்டு நிலையம் (die kantonalen Krebsregister), மத்திய கூட்டாட்சி அரச சுகாதார அலுவலகம் (Bundesamt für Gesundheit BAG), மத்திய கூட்டாட்சி அரச புள்ளிவிவர அலுவலகம் (Bundesamt für Statistik BFS), மாநில வைத்திய அத்தியட்சகர் மாநாடு (Konferenz der Kantonalen Gesundheitsdirektoren, GDK), சுவிஸ் மருத்துவர் ஒன்றியம் (Verbindung der Schweizer Ärztinnen und Ärzte FMH), சுவிஸ் குடும்ப மற்றும் சிறுவர் மருத்துவ ஒன்றியம் எம் எப் ஏ (mfe Haus- und Kinderärzte Schweiz), H+ சுவிஸ் நாட்டு மருத்துவமனைகள் (H+ Die Spitäler der Schweiz), புற்று நோய்க்கெதிரான ஒங்கோசுயிஸ் ஒன்றியம் (Schweizerische Vereinigung gegen Krebs Oncosuisse), சுகாதாரத் துறையில் தராதரத்தை நிர்வகிக்கும் சுவிஸ் சமூகம் (Schweizerische Gesellschaft für Qualitätsmanagement im Gesundheitswesen sQmh), சுவிஸ் புற்று நோய் ஒன்றியம் (Krebsliga Schweiz) , சுவிஸ் நோயாளர் ஒன்றிய அறக்கட்டளை நிலையம் (Schweizerische Stiftung Patientenorganisation, SPO), சுவிஸ் நோயாளர் நிலையங்களின் தலைமைச் சங்கம் (Dachverband schweizerischer Patientenstellen).